பிரிவினர்களுக்கான வயது உச்சவரம்பு 35-லிருந்து 37 ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) இதர பிரிவினருக்கு தற்போதுள்ள வயது உச்சவரம்பு 30-லிருந்து 32 ஆகவும் உயர்த்தப்படுகிறது என்பதை இப்பேரவைக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வனத் துறை, பள்ளிக் கல்வி, உயர் கல்வி, தகவல் தொழில்நுட்பவியல் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைகள் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களிடம் பயிற்சி எடுத்ததால், மாண்புமிகு அம்மா அவர்களைப்போன்று, அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்கள், நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக அனைத்துத் துறைகளைப் போல, வனத் துறை வளர்ச்சிக்கும் ஆலோசனை கூறி, சட்டமன்றத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை முன்வைக்கும்போது குறிப்பெடுத்து, நேற்று 31-5-2018 அன்று அவர்கள் எழுந்து வனத் துறைகளினுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்ற நல்ல செய்தியை அறிவித்த மனிதநேயர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் திரு. எடப்பாடியார் அவர்கள், இன்று விதி 110-ன்கீழ் அறிவிப்புகளை அறிவித்து, வனத் துறையைத் திக்குமுக்காடச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் உள்ள வனப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து பற்றியும், அந்தத் தீ விபத்து எப்படி ஏற்படுகிறது என்பதைப் பற்றியும் சொல்லி, அதைக் கட்டுப்படுத்துகின்ற நிகழ்வில் ஏற்படுகின்ற துரதிருஷ்டவசமான பிரச்சினைகள், காயம்பட்டவர்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் மாபெரும் மனதோடு, தீ விபத்து ஏற்படாமல் வனத் துறையைக் காக்க உரிய நடவடிக்கை எடுப்பதற்கு 2 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருப்பதற்கு மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2018 ஜூன் 1] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

முற்பகல் 11-10

அதைப்போலவே, 10 மாடிக் கட்டடத்தில் காலங்காலமாக இயங்கி வருகின்ற வனத் துறை தலைமை அலுவலகத்திற்கு, வேளச்சேரியிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் 30 கோடி ரூபாய் செலவில் நம்முடைய கோட்டை இருப்பதைப் போன்று பெரிய மாளிகையாகக் கட்டப்படும் என்ற நல்ல அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்துள்ளார்கள் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைப்போல ரூ.30 கோடி ரூபாய் செலவில், வேளச்சேரியில் ஒரு நல்ல மாளிகை கட்டிக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், வனச் சரகங்களுக்கு 125 புதிய ஜீப்புகள் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்ற மகத்தான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்போலவே, சத்தியமங்கலத்தில் பழங்குடியின மக்களின் கலாச்சார வளமையைப் பாதுகாப்பதற்கு அருங்காட்சியகம் மற்றும் பழங்குடியினர் சூழல் கலாச்சார கிராமம் ஒன்று 7 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு, தமிழ்நாடு பழங்குடி மக்களின் வாழ்க்கையில் பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும். ஏறத்தாழ 49 கோடி ரூபாயை வனத் துறைக்கு வாரி வழங்கி பெருமை சேர்த்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வனத் துறையின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு சகோதரிகளே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, சென்ற வாரம் ஆங்கிலப் பத்திரிகைகளும், தமிழ்ப் பத்திரிகைகளும், வனத் துறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நல்ல நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு, வனத் துறை புதிய வேகத்தில், திறமையான நிருவாகிகளை நியமித்து சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது என்ற பாராட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் தெரிவித்திருக்கிறது. அதை நிரூபிக்கின்ற வகையிலேயும், அதற்கு மேலும் கட்டியம் கூறுகின்ற வகையிலேயும் இன்றைய அறிவிப்புகள் இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத் துறைக்கு மேலும் சிறப்புச் சேர்க்கின்ற வகையில், விதி 110-ன்கீழ் செய்திருக்கின்ற அறிவிப்பால் வனத் துறை மேலும் சிறப்பாகச் செயல்படும் என்ற உறுதியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக வனத் துறையின் சார்பில் எங்களுடைய மகிழ்வான நன்றியை வணக்கத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு காணிக்கையாக்குகின்றேன்.

காட்டுத் தீ எப்படிப் பரவும் என்பதையும், குரங்கணியில் ஏற்பட்ட தீ விபத்திலே பாதிக்கப்பட்டு, பயந்திருந்த மக்களை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், நாங்களும் நேரடியாக கண்டோம். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டுத் தீயைத் தடுப்பதற்காக, வனத் துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து நல்ல நிதி உதவியையும் அளித்திருக்கிறார்கள். வனப் பகுதிகளில் தீ பரவாமல் கட்டுப்படுத்துவதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களைப்போல நல்லாட்சி நடத்தி, விதி 110-ன்கீழ் சிறப்பான அறிவிப்புகளை மக்களுக்கு அளித்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை வணக்கத்துடன் தெரிவித்து, அன்போடு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், விதி 110-ன்கீழ் இன்றைக்கு அறிவித்திருக்கின்ற அறிவிப்புகள் என்பது. மாண்புமிகு அம்மா அவர்கள் கண்ட கனவை, அவர்கள் என்ன நினைத்தார்களோ அதை நிறைவேற்றுகின்ற அளவிற்கு உள்ளன. 'குப்தர்கள் ஆண்ட காலம் பொற்காலம்' என்று சொல்வார்கள். அதைப்போல, பள்ளிக் கல்வித் துறைக்கு ஒரு பொற்காலத்தை உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் காணுகின்றபோது, இந்த அரசு அம்மாவின் நிரந்தரமான அரசு என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் அமைந்துள்ளது. மாணவர்களுக்கு* R.O. water—*அதாவது சுத்தமான மற்றும்*

2018 ஜூன் 1] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய நாட்டின் வரலாற்றில் ஓர் அரசால் முதன்முதலில் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது என்றால், அது தமிழகத்திலே மட்டும்தான் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, Smart card வழங்கும் திட்டம் மற்றும் Smart classes அமைக்கப்படுகின்ற திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். ICT என்ற முறையில் அனைத்துப் பள்ளிகளிலும் ஏறத்தாழ 2,283 திறன் வகுப்பறைகளை உருவாக்குவதற்காக, 42.92 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது, இந்திய நாட்டின் வரலாற்றில் எதிர்காலத்தில் தனியாரை மிஞ்சுகின்ற அளவிற்கு பள்ளிக் கல்வித் துறையை கொண்டு செல்லும் என்பதையும் நான் இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்புக் கல்வியாண்டில் புதியதாகக் கொண்டுவரப்பட்டுள்ள பாடத் திட்டம் என்பது இன்றைக்கு ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிறது என்று அனைவரும் பாராட்டி வருகிறார்கள். 1, 6, 9, 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான அந்தப் பாடத் திட்டத்தை எப்படி வகுத்துத் தருவது என்பதற்காக 2 இலட்சம் ஆசிரியப் பெருமக்களுக்குப் பயிற்சிகள் அளிக்க, 35.14 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். இதன்மூலமாக கல்வித் துறையில் ஒரு வரலாற்றை படைக்கிற மாநிலமாக தமிழ்நாடு உருவாவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது மேலும் ஒரு மகிழ்ச்சியைத் தருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதேபோல, 32 மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு ஒரு மேல்நிலைப் பள்ளியைத் தேர்வு செய்து, அதற்காக 50 இலட்சம் ரூபாய் நிதியை அங்கே இருக்கின்ற மாணவர்களுக்கு பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து ஒரு வரலாற்றைப் படைப்பதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். மாணவ மாணவிகளுக்கு மேம்படுத்தப்பட்ட திறன் அட்டை வழங்க 11 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாதிரிப் பள்ளி என்பது என்றைக்குமே ஒரு புதிய வரலாற்றை உருவாக்கும் என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2018 ஜூன் 1

அதேபோல, மாணவர்களுக்காக வழங்கப்படும் Smart card-ஐ பொறுத்தவரையில் இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாக தமிழகம் உள்ளது. ஆந்திர மாநிலம் முதன்முதலில் Smart card வழங்கியிருக்கிறது. மாணவர்களுடைய வருகையை மாணவர்களுடைய பெற்றோர் தெரிந்துகொள்வதற்கும், அவர்களைக் கண்காணிப்பதற்கும், code word—ஐப் பயன்படுத்தி, மாணவர்களுடைய வருகைப் பதிவேடுகள் போன்றவற்றைத் தெரிந்துகொள்வதற்கும், அவர்களுடைய உருவப்படத்தை அதிலே இணைப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதில் இந்தியாவிலேயே நம்முடைய மாநிலம், முதல் மாநிலமாக இன்றைக்குத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி smart card வருகின்றபொழுது, மாணவர்கள் எவ்வளவு பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையோடு மட்டுமல்லாமல், இடை நிற்றல் என்ற முறையில் எத்தனை மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்பதைத் தெரிந்துகொள்வதற்கும், மாணவர்களுடைய நடவடிக்கை எப்படி இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. தனியார் இன்றைக்கு அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிற அளவுக்கு தமிழக பள்ளிக் கல்வித் துறை பல்வேறு மாற்றங்களை உருவாக்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாற்றத்திற்கு, நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களும், துணை முதலமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், நிதியை அள்ளித் தந்திருக்கிறார்கள். விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வெளியிட்டிருக்கின்ற இந்த 5 திட்டங்களும் தமிழகத்தின் வரலாற்றில் என்றைக்கும் இடம்பெறும் என்று சொல்லி, என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று ஒரு கூற்று உண்டு. கேட்காமலே கொடுக்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தருணத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

2018 ஜுன் 1] [திரு. டி. ஜெயக்குமார்]

நம்முடைய இளைஞர்கள் Group-I மற்றும் Group-I-A, I-B தேர்வுகள் எழுதுவதற்கான வயது வரம்பை உயர்த்த வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை நீண்ட நாள் கோரிக்கையாகும். எனவே, அந்த நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்றவிதமாக, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல ஓர் அறிவிப்பை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சமூக நீதியை நிலைநாட்டுகின்ற ஒரு மாநிலம். 1921 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவிலேயே இட ஒதுக்கீடு என்று சொல்லும்போது, அந்த இட ஒதுக்கீட்டை நெறி தவறாமல், பிழையில்லாமல் அமல்படுத்தி, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சீர்மரபினர்கள் மற்றும் அனைத்து தரப்பின மக்களுக்கும் சமூக நீதி வழங்கிய ஒரே அரசு, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் இட ஒதுக்கீட்டுக்கு மண்டல் கமிஷன்மூலம் அன்றைக்கு பிரச்சினை ஏற்பட்டபோது, அதாவது 50 சதவிகிதத்திற்கு மிகாமல் இட ஒதுக்கீடு இருக்கக் கூடாது என்றபோது, இந்தியாவிலேயே அந்த உத்தரவை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றதோடு மட்டுமல்லாமல், 69 சதவிகித இட ஒதுக்கீடு நம்முடைய உரிமை என்பதை நிலைநாட்டிய ஒரே முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் இந்தியா முழுவதும் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சமூக நீதியை நிலைநாட்டியவர். எனவேதான் திராவிடர் கழக தலைவர் அவர்கள்கூட மாண்புமிகு அம்மா அவர்களை 'சமூக நீதிக் காவலர்' என்று அழைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்று அழைத்தார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு சமூக நீதி காத்த வீராங்கனையினுடைய அரசு, அம்மாவினுடைய அரசு சென்று கொண்டிருக்கின்ற நிலையிலே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் கட்டுப்பாட்டிலே இருக்கின்ற Tamil Nadu Public Service Commission தேர்வுகளுக்கு வயது வரம்பை உயர்த்தி ஆணையிட்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் துறையின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்து அமருகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைகளை உடைத்து, மடைகளைத் திறந்து, மாற்றங்களைத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களால் உயர் கல்வி உச்சத்தைத் தொட்டது; உலகத் தரத்தைப் பெற்றது. 2011 முதல் 2017 வரை 65 புதிய கல்லூரிகளை வழங்கிய அதே வழியில், அதே நெறியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 2017-2018 ஆம் கல்வியாண்டிலே 11 கல்லூரிகளைத் தந்தார்கள். ஆக மொத்தம் 76 கல்லூரிகள். இந்தக் கல்வியாண்டிலே 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளையும், அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ், திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 மண்டல மையங்களில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் 4 இளநிலை பொறியியல் பட்டப் படிப்புகளையும் அர்ப்பணிப்போடு தமிழகத்திற்கு வழங்கியவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களும். 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' என்றார் மாபெரும் புரட்சியாளர் 'ஃபிடல் காஸ்ட்ரோ'. இன்று வரலாறு வாழ்த்தும் என்று சொல்லக்கூடிய வகையிலே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஒரே நேரத்தில் 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை, (மேசையைத் தட்டும் ஒலி) ஓராண்டுக்கு தொடரும் செலவினமாக ரூ.152 கோடி செலவிலே மாணவர்களுடைய நலன் கருதி, அரசு கலைக் கல்லூரிகளாக மாற்றி, மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்கள்.*

அதோடுமட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கு புதிய பாடப் பிரிவுகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்தவுடனே, ஒரே ஆண்டில் 264 புதிய பாடப் பிரிவுகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக வகுப்பறைகள், ஆய்வகங்கள், அதற்குண்டான ஆசிரியப் பெருமக்கள் நியமனத்திற்கும் 62 கோடி ரூபாயை ஒதுக்கி, ஒரு புதிய சகாப்தம் படைத்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2018 ஜூன் 1] **[திரு. கே.பி. அன்பழகன்]**

இதுமட்டுமல்லாமல், 6 பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள் என்பது உயர் கல்விக்குக் கிடைத்த மகுடம் மட்டுமல்ல, மறுமலர்ச்சியும்கூட. நற்றமிழ் நாட்டில் ஒரே நேரத்தில் 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை அரசுக் கல்லூரிகளாக மாற்றி வழங்கிய பெருமை விடுதலைக்கு முன்பும் இல்லை, விடுதலைக்குப் பின்பும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் மனம்; முல்லைக்கு தேர் தந்த பாரியின் குணம்; அதியமானுக்கு நெல்லிக் கனி தந்த ஔவையின் கனிவு.' இது வெறும் வார்த்தைகள் அல்ல; முடியுமா என்று வியக்கும்வண்ணம் சமூகத்திற்கு புதிய விடுதலை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு பக்கபலமாக நின்று துணை நிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் பல இலட்சம் மாணவர்கள் சார்பிலும், அவர்களுடைய குடும்பத்தார் சார்பிலும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை, நிறைந்த மனதுடன் இப்பேரவையின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன். இது அறிவிப்பு மட்டுமல்ல, அறிவு உலகத்திற்கு அரசியல் வழங்கும் அர்ப்பணிப்பு என்பதை இப்பேரவை பதிவு செய்துகொள்ளும் என்ற பெருமிதத்தோடு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் தென்றல், அன்னை வழியில் பயணிக்கும் உண்மைத் தொண்டன், கொங்கு நாட்டின் தவப் பயன் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். 'வரும், ஆனால் வராது' என்ற நிலையினை மாற்றி, அன்னை வழியில், காவேரியினை சாணக்கியத்தனமாக மீட்டெடுத்த கரிகால் சோழன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் மறு உருவம் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என அனைவரும் படபடக்க, எதற்கும் போராட்டம் என்கின்ற கூட்டமோ துடி, துடிக்க, 'ஸ்டெர்லைட்' என்ற ஆலகால விஷத்தினை நீலகண்டராக மாறி, (மேசையைத் தட்டும்

ஒலி) எதிரணியினரும் பாராட்டத் துடிக்கும் அளவில், ஒரே ஆணையில் அனைவரையும் மகிழ வைத்த மகேஸ்வரன் எங்கள் தங்கம் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) இவரின் சாணக்கியத்தனம், சாணக்கியனே இவரிடம் பாடம் படிக்கத் தூண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எனது துறையோ சிறிது, இதன் எதிர்கால நிலையோ பெரிது என்பதை எண்ணி, தனது தீர்க்கதரிசனத்தோடு விதி 110-ன்கீழ் வழங்கியுள்ள இந்த அறிவிப்புகள் தமிழ்நாட்டின் விஞ்ஞானப்பூர்வமான வளர்ச்சியில் ஆக்கப்பூர்வமான பங்கை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய அறிவிப்புகளை வழங்கியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது துறையின் சார்பாகவும், என் சார்பாகவும், எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

(அ) களக்காடு, காமராஜர் சிலையை அகற்றாமல் பாலம் அமைக்கும் பணி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காங்கிரஸ் கட்சி சார்பில் மாண்புமிகு உறுப்பினர்களில் யாராவது ஒருவர் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உங்கள் கட்சி சார்பில் யாராவது ஒருவர்தான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. எச். வசந்தகுமார், நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.*

முற்பகல் 11-25

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.*